2018 ஜூன் 13]

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனது, வந்தது எல்லாம் இல்லை. அங்குள்ள நிலைமையைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதாவது, ஒரு நிமிடம், . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு விரிவான பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. மீண்டும், அவர் **பேசியது அவைக் குறிப்பில் இருக்கலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், விதி—55, அதாவது கவன ஈர்ப்பு குறித்து விவர அறிக்கையை ஏன் இந்த அவையில் வைக்கிறார்கள் என்றால், அதிலிருந்துதான் நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். அதில் இல்லாத பொருளைக் குறித்து, உங்கள் சௌகரியத்திற்கு கேட்டு, அதை* record *செய்தால் சரியாக இருக்காது. ஆகவே, அது அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது என்பதால், அது மட்டும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முதலில் கேட்ட கேள்வி முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு துணை முதலமைச்சரின் பதிலும் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லப்பட்ட காரணத்தினால், தயவுசெய்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த பகுதிக்கு நான் போகவேண்டும். உட்காருங்கள்.*

(ஆ) 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4 (A)—ஐ நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. மு. திராவிடமணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(குறுக்கீடு) இருங்கள். இந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் தெரிவித்த பின்னர் தான், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன், நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாம். (குறுக்கீடு) வேண்டாம் விடுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் வாய்ப்பு கொடுத்தேன், நீங்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. அதற்கு நான் என்ன செய்வது? மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

***திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 3, 4, 1 (3)—ல் உள்ள விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றி, அதாவது விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். பிறகு, நீங்கள் பேசலாம்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 4 (A)—ஐ நடைமுறைப்படுத்த வேண்டியது." குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறிப்புகளை அரசு பரிசீலனை செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் விவர அறிக்கையைப் பற்றிச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூன் 13] [*திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்*]

விவர அறிக்கை

தனியார் காடுகளை வரைமுறைப்படுத்துவதற்கு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 என்ற சட்டம் நடைமுறையிலுள்ளது. தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், சூழியல் சமன்பாட்டினைப் (Ecological balance) *பாதுகாக்கவும், தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 இயற்றப்பட்டது. பொதுவாக, வனத்தைப்போல் தோற்றமளிக்கும் இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட 2 எக்டேர் பரப்பளவுக்குமேல் தொடர்ச்சியாக உள்ள நிலங்கள், இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் காடுகளாக அறிவிக்கப்பட்டு, இந்த வகையான நிலங்களைக் கண்டறிந்து அறிவிப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழுவும் உருவாக்கப்பட்டு, அக்குழுவும் இப்பணியினைச் செவ்வனே செய்து வருகிறது.*

2. மேலும், தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949—ன் தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்று அரசாணை எண் 322, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 3) துறை, நாள் 3—9—2012 மூலமாக அமைக்கப்பட்டது. இந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்படி, அரசு கடித (நிலை) எண் 5, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம் 3) துறை, நாள் 19—1—2015—ன்படி தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949—ன்கீழ் அளிக்கும் மனுக்கள்மீது 60 நாட்களுக்குள் மாவட்டக் குழுவால் ஆணை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணை எண் 202/1995, நாள் 12—12—1996 ஆணையில், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ல் குறிப்பிடப்பட்டுள்ள வன நிலங்கள் என்பது, அகராதியில் குறிப்பிட்டுள்ளபடி உள்ள வனமாகவோ அல்லது எந்தவொரு சட்டம் அல்லது அரசு ஆவணத்தில் வன நிலங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலோ அந்த நிலங்கள் "எவருக்கு சொந்தமாயிருப்பினும்" வனப் பாதுகாப்புச் சட்டம் 1980—க்கு உட்பட்ட நிலங்கள் என ஆணை பிறப்பித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணைக்கு புறம்பாக, மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது உயர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் எந்தவொரு ஆணை பிறப்பித்திருந்தாலும் அல்லது இனி பிறப்பித்தாலும், 12—12—1996 ஆம் நாளன்று வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற நீதிப் பேராணையினைப் பின்பற்ற வேண்டும் என

உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, தனியார் காடுகளுக்கும் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 பொருந்தும்.

4. மேற்குறிப்பிட்ட தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949, பிரிவு 3 (i) (a)–ன்படி, எந்த ஒரு தனியார் வனத்தின் உரிமையாளரும், மாவட்ட வனக் குழுவின் முன்னனுமதியின்றி, அந்த வனத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையுமோ வாங்கவோ, விற்கவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறு விதத்தில் விற்பனை செய்யவோ இயலாது.

5. எனவே, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949, தனியார் வளர்த்த மரங்களை வெட்டுவதைத் தடை செய்யவில்லை. ஆனால், வரன்முறையற்ற மரவெட்டுகளை தமிழகத்தில் உள்ள அனைத்து தனியார் பகுதிகளிலும் முறைப்படுத்தவும், சூழியல் சமன்பாடு மற்றும் காடுகளைப் பாதுகாப்பதற்காகவும் உரிய முன்னனுமதியுடன் முறைப்படுத்தப்படும் நோக்கில் இந்த சட்டப் பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

6. எனினும், மாவட்ட வனக் குழுவின் முன்னனுமதி பெறாமல், தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949–ன்கீழ் தனியார் காடுகள் என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களை வாங்கியவர் தனது உரிமையைப் பெற்றிட 4A எனும் புதிய பிரிவு உட்புகுத்தப்பட்டு அரசு அறிவிக்கை எண் 167, நாள் 3–8–2015–ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டத் திருத்தத்தை சட்டத்திற்குள் உட்புகுத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, நீங்கள் ஒரு கேள்வியைத்தான் கேட்க வேண்டும். இன்னொரு கேள்வி மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களுக்கு.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு important question. ஏனென்றால், இது Question of Law. இதில் Question of Law is prevailing. அதனால் கொஞ்சம் நேரம் கூடுதலாக கொடுத்தால் நன்றாக இருக்கும். விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விதிமுறைக்கும், நடைமுறைக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அரசின் வருவாய் இழப்பிற்கும் எந்தவிதமான விளக்கமும் இல்லை.

2018 ஜூன் 13] [*திரு. மு. திராவிடமணி*]

நண்பகல் 12–00

*இது ** பரப்பைப் பற்றியும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி, குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது. அந்த வார்த்தை நீக்கப்படுகிறது. விவர அறிக்கையிலிருந்து கேள்வியை மட்டும் கேளுங்கள். உறுப்பினர் திரு. திராவிடமணி என்ன இது?*

திரு. மு. திராவிடமணி: The Tamil Nadu Preservation of Private Forest Act, 1949 Section (1) Clause (3) is very clear, —Applicability and Nature of the Forest. *அதாவது என்னவென்றால் 5 ஏக்கர் நிலத்திற்கு அதிகமாகவும் அதைப்போல* nature *ஆகவும்* continue *ஆகவும் இருக்கிற இடத்தில்தான் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு மாறாக,* notify *எப்படிச் செய்திருக்கிறார்கள் என்றால் ஒரு ஏக்கர், அரை ஏக்கர், அரை சென்ட், கால் சென்ட்,* building, *அரசு அலுவலகங்கள் போன்றவை வரன்முறை செய்யப்பட்டிருக்கின்றன. வரன்முறை செய்யப்பட்டிருப்பது தவறாக இருப்பதனால்தான் இந்தச் சட்டத்தைச் சரியாக அமல்படுத்த முடியவில்லை. இதில், இன்னொரு விஷயம் என்னவென்றால், நீதிப்பேராணை எண் 202/1995–க்கும் இந்தச் சட்டத்திற்கும் எந்தப் பொருத்தமும் கிடையாது. நீதிப்பேராணை எண் 202/1995,* Section *(17)–ல்* deforestation and further encroachment*–ம் செய்யக் கூடாது என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையும் இதையும்* club *செய்வது சரியாக இருக்காது. அதைப்போல, 1991–ல் ஒரு* notification*–ம், 2009–ல் ஒரு* notification*–ம் வந்திருக்கிறது. இந்த* notifications*–ல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த* notification*–க்கும் நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை மட்டும் சொல்லுங்கள். தேவையில்லாமல் வேறு எதைப்பற்றியெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்?*

திரு. மு. திராவிடமணி: *அதாவது, இந்தச் சட்டம் 5 ஏக்கருக்கு அதிகமாகவும், இயற்கையாக தொடர்ச்சியாக இருக்கிற இடத்தில் மட்டும்தான் அமல்படுத்த வேண்டுமென்று ஒரு* de–notification *செய்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று இந்த அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு கேள்வி கேட்கலாம்; பேசுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளை முழுவதுமாக பாதித்திருக்கிறது. 60 விழுக்காடு விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். சொத்தை விற்கவோ, வாங்கவோ முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.* Section 4 (i) (a) *என்ன சொல்கிறது என்றால், மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியோடு 60 நாட்கள் மட்டுமே அவகாசம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற* notified areas Town Panchayats *ஆகும்.* Town Panchayats*–ல்* Medical Colleges *மற்றும்* Engineering Colleges *இருக்கின்றன. அந்தப் பகுதிகளை தனியார் காடுகள் என்ற வகைப்பாட்டின்கீழ் கொண்டுவர முடியுமா என்ற மிகப் பெரிய ஐயம் ஏற்படுகிறது. அப்படியென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில்,* Township*–ல் வாழ்கிற மக்கள் எப்படி வாழ்வார்கள்? கேரளாவிலும் இதே பிரச்சினை இருக்கிறது. கேரள அரசு அதை நீக்கிவிட்டது. மத்திய அரசின் சொல்லைக் கேட்கவில்லை. மக்கள் வாழ்வதற்காக கேரள அரசு அந்தச் சட்டத்திலிருந்து விலக்களித்தது. ஏன் தமிழகத்தில் அவ்வாறு செய்யக் கூடாது? கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கின்ற ஏழையெளிய விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தை மனதில்கொண்டு,* Section 4(1) (a)*–ன்படி அல்லது ஒரு ஷரத்தை உருவாக்கி, இல்லையென்றால் இந்த அவையில் ஒரு புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து வனப் பகுதியில் இருக்கக்கூடிய பகுதிகளில் தனியார் காடுகளில் இருக்கக்கூடிய பகுதியை நீக்கம் செய்ய ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பில்லை. அவ்வளவுதான் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் ஊட்டி பகுதியைப் பற்றிக்*

2018 ஜூன் 13] **[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]**

குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கன்னியாகுமரி பகுதியைப் பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி, குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராமு, திரு. அர்ஜூனன், எம்.பி. ஆகியோருடன் கலந்துபேசி சென்ற மாதத்திலிருந்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இருந்தாலும், இது Section 4A *சம்பந்தப்பட்ட விஷயமாகும். அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினை நீண்டகாலமாக இருக்கின்ற பிரச்சினையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்துபேசி சட்டத் திருத்தத்தை சட்டத்திற்குள் உட்புகுத்தினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து, நடைமுறைப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அன்போடு மாண்புமிகு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். ஒரு கேள்விக்கு மட்டும்தான் வாய்ப்பு.*

7. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.*